

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.3.2025) தனது பிறந்தநாளையொட்டி சென்னை, வேப்பேரி, பெரியார் திடலில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முழுவதும் 2025–2026 ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை தொடங்கப்படுவதையொட்டி நேற்று முன்தினம் (1.3.2025) சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாணவர்களுக்கான சேர்க்கை ஆணையை வழங்கினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பள்ளிக் கல்வித் துறை அரசு முதன்மைச் செயலாளர் மருத்துவர் பி.சந்தர மோகன், மாநகராட்சி பணிகள் குழு தலைவர் நே.சிற்றரசு, பள்ளிக் கல்வித் துறை இயக்குநர்கள் முனைவர் கண்ணப்பன், முனைவர் பழனிச்சாமி, முனைவர் பூ.ஆ, நரேஷ், அரசு உயர் அலுவலர்கள், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

## முதல்வரின் பிறந்த நாளிலிருந்து புதுப்பொலிவுடன் ‘முரசொலி’ பாசறைப் பக்கம்!






இளம் தலைமுறையினருக்கு, இயக்கக் கொள்கைகளைக் கொண்டுசேர்க்க கழக இளைஞரணி முன்னெடுப்பில், 2023 தமிழர் திருநாளன்று கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள், `முரசொலி’ பாசறைப் பக்கத்தைத் தொடங்கி வைத்தார்.

764 நாட்களாக கொள்கை உரமூட்டும்கழக உணர்வூட்டும் அரசியல் அறிவூட்டும் பல தொடர்களைக் கொண்டு வெளியாகி வரும் பாசறை பக்கம் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளான நேற்று முன்தினம் (1.3.2025) முதல் புதுப்பொலிவு பெறுகிறது.

● எழுத்தாளர் குமரன்தாஸ் எழுத்தில், கலைஞரின் திரையுலகப் படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும், `திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி’.

● தலைமைக் கழகச் செய்தித் தொடர்புத் துணைச் செயலாளர் சகோதரர் @DrHafeezDMKoffl எழுத்தில், கழகத்துக்கும் சிறுபான்மையினருக்குமான உறவை, உரிமைச் செயல்பாடுகளை விவரிக்கும் `மைனாரிட்டி தி.மு.க.’

● எழுத்தாளர் @PrakashRo307 எழுத்தில், பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய `இது பெரியார் மண்’ என திராவிட இயக்கத்தின் தேவையை வலியுறுத்தும், மூன்று புதிய தொடர்கள் வரும் வாரம் முதல் வெளியாகவுள்ளன.

இல்லந்தோறும் வெளிவந்து கொண்டிருந்த `முரசொலி’ பாசறைப் பக்கத்தை இன்று முதல் paasarai.in என்ற இணையதளத்திலும் படித்துப் பயன்பெறும் வகையில். கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

கழகத்தின் கொள்கை ஆயுதமாக, கழக உடன் பிறப்புகளுக்கு கருத்தியல் வலுவூட்டும் `முரசொலி’ பாசறைப் பக்கம் தமிழ்நாடு போராட, தமிழ்நாடு வெல்ல ஓங்கி ஒலிக்கும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா:

## கரூர் மாவட்டத்தில் விளையாட்டுப் போட்டிகள்!

### அமைச்சர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார்!

கரூர், மார்ச். 3 -

கழகத் தலைவர் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கரூர் மாவட்டத்தில் மாபெரும் விளையாட்டு திருவிழாவை அமைச்சர் செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார்.

மாவட்டம் முழுவதும் 250 இடங்களில் நடைபெறும் விளையாட்டு போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு மொத்த பரிசுத் தொகை ரூ.30 லட்சம் வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

திமுக கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு, கரூர் மாவட்ட கழகம் சார்பில் கரூர் மாவட்டத்தில் 157 ஊராட்சிகள், 48 மாநகராட்சி வார்டுகள், மூன்று நகராட்சிகளில் 21 இடங்கள், எட்டு பேரூராட்சிகளில் 24 இடங்கள் என மொத்தம் 250 இடங்களில் மாபெரும் விளையாட்டு திருவிழா இன்று தொடங்கியது. ஆண்களுக்கான போட்டியில் 100 மீட்டர் ஓட்டம், பாட்டிலில் நீர் நிரப்புதல், சைக்கிள் மித வேகம், மியூசிக் சேர், கயிறு இழுத்தல் (7 நபர்), பானை உடைத்தல் ஆகிய போட்டிகள் நடைபெற்றன. பெண்களுக்கான போட்டிகளில் 100 மீட்டர் ஓட்டம், பாட்டிலில் நீர் நிரப்புதல், மியூசிக் சேர், மியூசிக் பால், கயிறு இழுத்தல் (7 நபர்) போட்டிகள் நடைபெற்றன.

மேற்குறிப்பிட்ட விளையாட்டு திருவிழாவில் முதலிடம் பெற்று வெற்றி பெறுபவர்களுக்கு, மாவட்ட அளவில் சிறப்பு போட்டியில் நடத்தப்பட்டு, அதில் வெற்றி பெறுவோருக்கு பரிசுகள் வழங்கப்படும். போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு வழங்கப்படும் மொத்த பரிசுத்தொகை ரூ.30 லட்சம் ஆகும். மார்ச் 22 ஆம் தேதி கரூர் திருவள்ளூர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் விழாவில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுத்தொகை வழங்கப்படும் என கரூர் மாவட்ட கழக செயலாளரரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

மார்ச் 29ஆம் தேதி மாலை 7 மணிக்கு கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் கரூர் மாவட்ட அளவில் மாபெரும் கபடி போட்டி நடைபெற உள்ளது. மார்ச் 16ஆம் தேதி காலை 9 மணிக்கு கரூர் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் நடைபெற உள்ளது. மார்ச் 9ஆம் தேதி கரூர் மாவட்டத்தில் உள்ள 157 ஊராட்சிகள் 48 மாநகராட்சி வார்டுகள் 75 நகராட்சி வார்டுகள் 123 பேரூராட்சி வார்டுகள் என மொத்தம் 403 இடங்களில் பெண்கள் மட்டும் பங்கேற்கும் மாபெரும் கோலப் போட்டி நடைபெறுகிறது. இந்த மாபெரும் கோலப்போட்டியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கப்படும். முதல் மூன்று பரிசு பெறுரபவர்கள் மாவட்ட அளவில் மார்ச் 23ஆம் தேதி திருவள்ளுவர் மைதானத்தில் பிரமாண்ட அளவில் நடைபெறும் கோல போட்டியில் கலந்து கொள்வார்கள். அதில் வெற்றி வெற்றி பெறும் 10 நபர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்படும். ஏப்ரல் 5 ம்தேதி காலை 9 மணிக்கு கரூர் திருவள்ளூர் விளையாட்டு மைதானத்தில் கரூர் மாவட்ட அளவில் மாபெரும் கிரிக்கெட் போட்டியில் நடத்தப்பட உள்ளன. ஏப்ரல் 13ஆம் தேதி கரூர் அரசு கலைக் கல்லூரியில் கரூர் மாவட்ட அளவில் சதுரங்க போட்டிகள் நடத்தப்பட உள்ளன. ஏப்ரல் 27ஆம் தேதி மாலை 6 மணிக்கு கரூர் திருவள்ளூர் விளையாட்டு மைதானத்தில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு இலவசமாக சீருடைகள் வழங்கும் விழா நடைபெறுகிறது என கரூர் மாவட்ட கழகச் செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

### தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் வரிசையில் தோன்றிய

## திராவிட இயக்கத் தலைவர்களின் மாறாத பாசத்தை பெற்றவர் முதல்வர்!

### இந்தியக் கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு வாழ்த்துச் செய்தி!

சென்னை, மார்ச் 3 -

மூத்த தலைவர் இரா. நல்லகண்ணு அவர்கள் முதலமைச்சருக்கு பிறந்த நாள் வாழ்த்துக் கூறியுள்ளார்.

அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழ்நாடு அரசின் மாண்புமிகு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு 72 வது பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளி மாணவனாக பயின்று வந்த காலத்தில் இளைஞர் அணி தொடங்கி, அமைப்பு சார்ந்து இயங்கத் தொடங்கியவர்.

பெரியார், அண்ணா, கலைஞர் வரிசையில் தோன்றிய திராவிட இயக்கத் தலைவர்களின் மாறாத பாசத்தை பெற்றவர். பகுத்தறிவு கொள்கையின் தீவிர செயல்பாட்டாளர்.

ஜனநாயக உரிமைகள் காக்கும் போராட்டத்தில் அடக்குமுறை எதிர் கொண்டு, வென்று காட்டியவர்.

சட்டமன்ற உறுப்பினர், சென்னை பெரு நகர மேயர், எதிர்கட்சித் தலைவர் எனப் படிப்படியாக வளர்ந்து இன்று தமிழ்நாடு அரசின் முதல்வராக உயர்ந்து நிற்கிறார்.

வகுப்புவாத, மதவெறி, சாதிவெறி சக்திகளை எதிர்த்து போராடும் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி அமைத்து, நாட்டின் அரசியல் போக்குகளை திசை மாற்றி காட்டியவர். நாடாளுமன்ற ஜனநாயகம், அரசியலமைப்பு சட்டம், தேர்தல் நடைமுறைகள், கூட்டாட்சி கோட்பாடுகள், இரு மொழிக் கொள்கை நிலை, மாநில உரிமைகள், ஆளுநரின் அதிகார அத்துமீறல்கள் என பல் முனையிலும் “ஆக்டோபஸ்” போல, ஒன்றிய



அரசின் அச்சுறுத்தலும், அடக்குமுறைகளும், சுற்றி வளைக்கும் நெருக்கடி சூழலில், காரிருள் சூழ்ந்த கரிய வானத்தில் விடியலுக்கு நம்பிக்கையூட்டும் உதயசூரியன் போல் பொது வாழ்வில்திகழ்ந்து வரும் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்லாண்டு, பல்லாண்டு வாழ்வாங்கு வாழ்ந்திட இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வாழ்த்துகிறேன்.

இவ்வாறு இரா.நல்லக்கண்ணு அவர்கள் தெரிவித்துள்ளார்.

## இந்திய பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகிக்கிறது!

### ஒன்றிய கல்வி இணை அமைச்சர் சுகாந்தோ மஜீம்தார் பாராட்டு!

சென்னை மார்ச் 3 -

இந்திய பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகிக்கிறது என்று சென்னை ஐஐடியில் நடைபெற்ற தொழில்நுட்பக் கண்காட்சி தொடக்கவிழாவில் மத்திய கல்வி இணை அமைச்சர் சுகாந்தோ மஜூம்தார் பாராட்டு தெரிவித்தார்.

சென்னை ஐ.ஐ.டி.யில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான 2 நாள் தொழில்நுட்ப கண்காட்சி நேற்று முன்தினம் தொடங்கியது. இந்த கண்காட்சியை மத்திய கல்வி இணை அமைச்சர் சுகாந்தோ மஜூம்தார் தொடங்கிவைத்துப் பேசியதாவது: -

கல்வி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, புதுமை கண்டுபிடிப்பு ஆகிய துறைகளில் சென்னை ஐஐடி தொடர்ந்து தலைசிறந்து விளங்கி வருகிறது. தேசிய அளவில் சிறந்த தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களின் தரவரிசையில் (என்ஐஆர்எப் ரேங்க்) சென்னை ஐஐடி தொடர்ந்து முதலிடத்தை தக்கவைத்து வருகிறது.

அந்த வகையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான தொழில்நுட்பக் கண்காட்சி இங்கு நடத்தப்படுவது பொருத்தமானதாகும்.

புதுமை, கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, தொழில்முனைவு உள்ளிட்டவற்றில் முன்னணி மாநிலமாக திகழும் தமிழகம், இந்திய பொருளாதார வளர்ச்சியிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்திய தொழில்துறையின் வளர்ச்சிக்கு அடித்தளமாக திகழும் மிகப்பெரிய தொழிலதிபர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். இந்திய நாட்டை தொழில்நுட்ப சக்தியாக மாற்றுவதில் தமிழகத்தின் பங்களிப்பு அளப்பரியது. உலக அளவில் உற்பத்தித் துறையில் இந்தியா புதிய தலைமையாக மாறி வருவதிலும் தமிழகத்துக்கு முக்கிய பங்கு உண்டு.

வரும் 2047 ம் ஆண்டுக்குள் இந்தியா வல்லரசாகவும் ஸ்டார்ட் - அப் நிறுவனங்களின் தேசமாகவும் மாறும். அந்த இலக்கை விரைவாக எட்டுவதில் உயர்கல்வி நிறுவனங்கள் முக்கிய பங்காற்றி வருகின்றன. மத்திய அரசு புதுமை, கண்டுபிடிப்புகள், தொழில்நுட்ப தீர்வுகள், ஆராய்ச்சி துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. ஆராய்ச்சித் துறையில் கணிசமான முதலீடு செய்துள்ளது. மத்திய பட்ஜெட்டில் ரூ.1.2 லட்சம் கோடி கல்விக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடத்தக்க தொகை ஆராய்ச்சிக்கும் தொழில்நுட்ப மேம்பாட்டுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்க பல்வேறு புதிய திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் ஐஐடி இயக்குநர் வி.காமகோடி, டீன் மனு சந்தானம், அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் (ஏஐசிடிஇ) டி.ஜி.சீத்தாராம், டிஆர்டிஓ டைரக்டர் ஜெனரல் (தொழில்நுட்பம்) மங்கல் லால் சந்த் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கண்காட்சியில் 85க்கும் மேற்பட்ட அரசு, தனியார் துறை நிறுவனங்கள், கல்வி நிறுவனங்களின் அரங்குகள் இடம்பெற்றுள்ளன. அதில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், ட்ரோன் தொழில்நுட்பம், ஏவுகணை தொழில்நுட்பம், சூரிய மின்சாரம், காற்றாலை சக்தி, ரோபோட்டிக்ஸ் தொழில்நுட்பம், மனிதர்களின் உருவத்தைப் பெற்றிருக்கும் ஹியூமனாய்டு ரோபோக்கள் தொடர்பான தொழில்நுட்பங்கள் மற்றும் மாதிரிகளை காணலாம். இந்த கண்காட்சி நேற்று முன்தினம் (சனிக்கிழமை) நிறைவடைந்தது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சேப்பாக்கம் பகுதி திமுக சார்பில் திருவல்லிக்கேணி காந்தி கஸ்தூரிபாய் மருத்துவமனையில் நேற்று முன்தினம் பிறந்த குழந்தைகளுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தங்க மோதிரம் அணிவித்தார். இதில் தயாநிதிமாறன் எம்.பி. முன்னிலை வகித்தார். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பகுதி செயலாளர் மதன் மோகன், வட்ட செயலாளர் தமீம் அன்சாரி மற்றும் கழக நிர்வாகிகள், மருத்துவமனை அதிகாரிகள், டாக்டர்கள் உள்ளனர்



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.3.2025) தேனாம்பேட்டை மண்டலம், பாலாஜி நகரில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் நிதியின் கீழ் ரூ.1.00 கோடி மதிப்பில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடம் மற்றும் நியாய விலைக்கடையை திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு குடிமைப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு.மகேஷ்குமார், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார், கூடுதல் பதிவாளர் சா.ப.அம்ரித், மாமன்ற ஆளும்கட்சி துணைத்தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், மாமன்ற உறுப்பினர் திருமதி வே. கமலா செழியன் ஆகியோர் உடனிருந்தனர்.